- 8 அக் 2013

07 OCT 2013

சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று "மத கஜ ராஜா" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு கோரிக்கை நிராகரித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (சி1) துறை

அரசாணை (டி) எண்.528

30653

நாள்: 03.10.2013
விஜய, புரட்டாசி, 17
திருவள்ளுவர் ஆண்டு, 2044

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. வணிகவரி ஆணையர் கடிதம் எண். சட்டக்குழு–4/26877/2013, நாள் 05.09.2013, தேர்வுக்குழு எண்.57/2013–2014.

-----

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. வணிகவரி ஆணையர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு "மத கஜ ராஜா" தமிழ் திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்ட ஏழு உறுப்பினர்களில், ஐந்து உறுப்பினர்கள் இத்திரைப்படம் கேளிக்கை வரிவிலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என்றும், இரண்டு உறுப்பினர்கள் வரிவிலக்கு அளிக்கலாம் என்றும் பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

3. "மத கஜ ராஜா"தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகள் பின்வருமாறு :–

| வ. எண் | உறுப்பினர் திரு/திருமதி | பரிந்துரை |
|---|---|---|
| 1. | க. இசைவாணி இணை ஆணையர் (வணிகவரி) (செயலாக்கம்)– II, சென்னை. | இத்திரைப்படத்திற்கு 'U' சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றாலும், திரைப்படத்தின் தலைப்பு தமிழில் இல்லை என்பதாலும், திரைப்படத்தின் கதையானது தமிழ் பண்பாட்டின் வளர்ச்சிக்கு உகந்ததாக இல்லை என்பதாலும், திரைப்பட பாடல்களில் பிற மொழி ஆதிக்கம் உள்ளது என்பதாலும், திரைப்படத்தில் சில இடங்களில் ஆபாச வசனங்கள் அதிகமாக காணப்படுகிறது என்பதாலும், இத்திரைப்படம் வரி விலக்கிற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |

| | | |
|---|---|---|
| 2. | வே.கூமுச்சாமி, துணைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை | இத்திரைப்படத்திற்கு 'U' சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றாலும், திரைப்படத்தின் கதையின் கருவானது தமிழ் மொழி பயன்பாட்டிற்கு உகந்ததாக இல்லை என்பதாலும், திரைப்படத்தில் வன்முறை மற்றும் ஆபாசக் காட்சிகள் அதிகமாக காணப்படுகிறது என்பதாலும், இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்க வேண்டாம் என பரிந்துரை செய்துள்ளார். |
| 3. | முனைவர்,கா.மு. சேகர், எம்.ஏ., எம்.பில்., பி.எச்.டி இயக்குநர் தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை.8 | திரைப்படத்தின் தலைப்பு தமிழில் இல்லை என்பதாலும், திரைப்பட பாடல்களில் ஏராளமான ஆங்கில வரிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதாலும், திரைப்படத்தில் வன்முறை காட்சிகள் ஏராளமாக உள்ளது என்பதாலும், திரைப்படத்தில் பெண்களின் ஆடை குறைப்பு உள்ளது என்பதாலும், மேலும் திரைப்படத்தில் அமைச்சர் பதவியையும், அரசியலையும் கொச்சைப்படுத்துவதாக உள்ளதாலும் இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்க தேவையில்லை என பரிந்துரை செய்துள்ளார். |
| 4. | V.S.ராகவன், பழம் பெரும் நடிகர் | திரைப்படத்தின் தலைப்பு சுத்த தமிழில் இல்லை என்பதாலும், திரைப்படத்தில் வன்முறை காட்சிகள் சற்று அதிகமாகவும், பயமுறுத்துவதாகவும் உள்ளது என்பதாலும், நகைச்சுவை என்ற பெயரில் ஆபாச வசனங்கள் ஆங்காங்கே காணப்படுகிறது என்பதாலும், அரசாணையின் நிபந்தனைகளுக்கு உட்படாததாலும், இத்திரைப்படம் கேளிக்கை வரி விலக்கிற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |
| 5. | ராம்ஜீ, பத்திரிகையாளர் | திரைப்படத்தின் தலைப்பு தமிழ் அல்ல என்பதாலும், திரைப்படத்தில் ஆபாசம் மற்றும் கவர்ச்சி, வன்முறை மற்றும் பாடல்களில் ஆங்கில வார்த்தைகள் அதிகம் என்பதாலும், பொழுதுபோக்கு திரைப்படம் என்றாலும், தரக்குறைவு தவிர்க்கப்படவில்லை என்பதாலும், இத்திரைப்படம் வரி விலக்குக்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |
| 6. | M.N. ராஜம், பழம் பெரும் நடிகை | திரைப்படத்தின் தலைப்பு தமிழ் பெயர் கொண்டுள்ளதாலும், இத்திரைப்படம் 'U' சான்றிதழ் பெற்றுள்ளதாலும், ஆபாசம் மற்றும் வன்முறை இல்லாத பொழுது போக்கு கொண்ட திரைப்படம் என்பதாலும், இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்கலாம் என பரிந்துரை செய்துள்ளார். |
| 7. | ராஜஸ்ரீ, பழம் பெரும் நடிகை | இத்திரைப்படத்தின் பெயர் தமிழில் உள்ளதாலும், திரைப்படம் 'U' சான்றிதழ் பெற்றுள்ளதாலும், திரைப்படத்தில் பிற மொழி கலக்கல், வன்முறை மற்றும் ஆபாசம் இல்லை என்பதாலும், இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்க பரிந்துரை செய்துள்ளார். |

4. மேற்கண்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகளை ஆய்வு செய்ததில், "மத கஜ ராஜா" தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட பெரும்பான்மையான உறுப்பினர்கள் இத்திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளிப்பதற்கு பரிந்துரை செய்யவில்லை என்பதாலும், அரசாணை நிலை எண்.89, வணிகவரி மற்றும் பதிவு (சி1) துறை, நாள் 21.7.2011–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதி வரையறைகளை இத்திரைப்படம் பூர்த்தி செய்யவில்லை என்பதாலும், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் "மத கஜ ராஜா" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க இயலாது என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.
நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3/x/2013

பிரிவு அலுவலர்.
3.10.13